
பக்கங்கள் 21

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 13 திங்கட்கிழமை 29.09.2025 | அதிர்வு 59

## மன்னாரில் ரயில் மோதி ஆண் ஒருவர் உயிரிழப்பு



(எஸ்.ஆர்.லெம்பேட்)

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி உயிரிழந்த 05



## காற்றாலை திட்டத்துக்கு எதிராக மன்னாரில் இன்று பொது முடக்கம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் இன்று திங்கட்கிழமை பொது முடக்கம் நடைபெறவுள்ளது.

காற்றாலை திட்டத்துக்கு எதிராகவும் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலைக் கண்டித்துமே பொது முடக்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 04



# நாடு திரும்பியதும் தமிழரசுக் கட்சியை சந்திப்பார் அநுர

## அமைச்சர் சந்திரசேகர் தகவல்

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திப்பதற்கான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோரிக்கை நிறைவேறும். தற்போது வெளிநாடு சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதும் தமிழரசுக் கட்சியைச் சந்திப்பதற்கான திகதியை வழங்குவார்."

-இவ்வாறு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். 03

## கோரதீவு விபத்தில் சிறுமி ஒருவர் பலி




கோரதீவில் நேற்று இடம்பெற்ற விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

ஒரு மோட்டார் சைக்கிளில் நால்வர் பயணித்த நிலையில் 03

# அன்று காற்றாலை கோபுரத்தை திறந்து வைத்தவர்களே இன்று அதற்கு எதிராகப் போராட்டம்

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் சந்திரசேகர்

(எஸ்.நிதர்ஷன்)

கடந்த காலத்தில் மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின் நிலையத்தை அமைத்து கோபுரங்களைத் திறந்து வைத்தவர்களே இன்று அதற்கு எதிராகப் போராடுகின்றார்கள் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற



ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 04




பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தடுமாறிக் கொண்டிருக்கும் இலங்கைக்கு அதிலிருந்து மீளுவதற்கு முக்கிய இடைஞ்சலாக இருப்பது அந்நிய செலாவணி கையிருப்பு இல்லாதமைதான்.

அந்நிய செலாவணி கையிருப்பை மேம்படுத்தச் செய்வதற்கு ஒன்றில் ஏற்றுமதி பொருளாதாரத்தை விருத்தி செய்ய வேண்டும். அல்லது வெளிநாட்டுத் தரப்பினர் நாட்டுக்குள் முதலீடு செய்வது மற்றும் அந்த நாட்டு பணத்தை நமது நாட்டுக்குள் கொண்டு வருவதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்றவற்றைச் செய்ய வேண்டும்.

இலங்கை அரசாங்கம் உடனடியாக 04




# சர்வதேச நீதி கோரி தொடரும் போராட்டம் சிறீதரன், கஜேந்திரகுமார் நேற்று பங்கேற்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

தமிழினப் படுகொலைகளுக்கும், தமிழ் உறவுகள் காணாமல் ஆக்கப் பட்டமைக்கும் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நான்காவது நாளாக யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது.

நேற்றைய போராட்டத்தில் நாடாளு மன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம் பலம் ஆகியோர் கலந்துகொண்டு ஆதரவு வழங்கினர்.

இந்தப் போராட்டம் யாழ். செம்மணி யில் கடந்த 25ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.












# எங்களின் மீது சேற்றை வீசும் கஜேந்திரகுமார் அணியினர்

## யாழில் அமைச்சர் சந்திரசேகர் காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இறுதி நாளில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த சம்பவத்துக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என அக்கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த ஒரு வார காலமாக திலீபன் நினைவேந்தல் நடைபெற்றது. அங்கு அனுஷ்டிப்பை செய்ய நாங்கள் சென்றபோது தடுக்கப்பட்டோம். அதன் பிறகு சில தினங்களுக்கு முன்னர் இறுதி நாள் நினைவேந்தல் நடந்து முடிந்தது. அன்று யாரோ ஒருவர் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததாகவும் அவர் மீது தங்கள் வன்முறையை கஜேந்திரர் அணி கையாண்டதாகவும் அதேபோன்று நியாயத்தன்மையை கேட்கச் சென்றவேறு சிலருக்கும் பல்வேறு இன்னல்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் எந்தவொரு சம்பந்தமும் கிடையாது. இதில் எந்தப் பங்களிப்பும் கிடையாது. அந்தளவுக்குக் கீழ்த்தரமான வேலை எம்மிடம் கிடையாது.

நாங்கள் ஆளும் கட்சி என்ற வகையில் சின்னச் சின்ன சிலும்பல் வேலைகளுக்கு எதிராக நாங்கள் எடுக்க வேண்டுமாக இருந்தால் இதைவிட வேறு விதமாக எடுக்க முடியும். அந்தச் சின்னத்தனமான வேலைகளை நாங்கள் செய்வதில்லை.

மனிதனை அனுஷ்டிப்பதற்குப் போராடுவதற்கோ கருத்துச் சொல்வதற்கோ பூரணமான சுதந்திரம் இருக்கின்றது. ஊடக சுதந்திரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி கருத்துச் சுதந்திரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி முன்னரை விட தற்போது சுதந்திரம் அதிகமாக இருப்பதனாலேயே, சமூக வலைத் தளங்கள் அனைத்திலும் எமக்கு எதிராகப் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன.



போராடுவதற்கான உரிமை இருப்பதன் காரணமாகவே கடந்த காலங்களைப் போன்று புலனாய்வு பிரிவினராலும் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் எந்தவித இடையூறும் இல்லாத காரணமாகவே இந்த வன்முறையைக் கையாளுகின்ற கஜேந்திரகுமார் அணி எங்கள் மீது சேறுகளை வீசுகின்றார்கள்.

இந்த நபர்களுக்கு வேறு அரசியல் கிடையாது. இவர்களுக்கு இருக்கின்ற அரசியல் எங்கள் மீது சேறு வீசுவதை தவிர வேறு எதுவும் கிடையாது.

சகல அபிவிருத்தித் திட்டங்களையும் எதிர்கின்றவர்களாக அவர்கள் மாறி இருக்கிண்றார்கள். 17 வருடங்களுக்குப் பிறகாவது எங்களை நிம்மதியாக வாழ விடுங்கள் என மக்கள் கேட்கின்றார்கள்.

மக்கள் எங்கள் பிரதேசத்தை முன்னேற்ற வேலை செய்யுமாறு கேட்கின்றார்கள். எங்கள் பிள்ளைகளுக்குப் போதிய கல்வியைப் பெற்றுக்கொடுக்க வேலை செய்யுமாறு கேட்கின்றார்கள்.

எங்கள் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுங்கள் என்று எங்கள் மக்கள் கேட்கின்றார்கள். எங்கள் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளைத் தாருங்கள் எனக் கேட்கின்றார்கள்.

அவ்வாறு கேட்கும் போது எல்லா வற்றையும் எதிர்க்கின்ற வன்முறை ரீதியான கருத்துக்களை மாத்திரமே கூறத் தெரிந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணி எங்கள் மீதான சேறுகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையில் இருக்கின்ற மக்களுக்கென்றாலும் சரி யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களுக்கு என்றாலும் சரி இவர்களுடைய சித்து விளையாட்டுக்கள் அனைத்து நன்றாக தெரியும்.

இவர்கள் போலித்தனமானவர்கள் போலி தேசியவாதிகள் என்பது மக்களுக்கு தெரியும். இவர்களின் கூலி நாடகம் என்பது வெளிநாட்டில் இருந்து வருகின்ற பணங்களால் இடம்பெறுகின்றதே தவிர தங்களுடைய அர்ப்பணிப்பால் தங்களுடைய தியாகத்தால் அல்ல என்பது மக்களுக்குத் தெரியும். நாங்கள் அவற்றை அலட்டிக் கொள்வதில்லை." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கேரதீவு விபத்தில்..

நிலைதடுமாறி இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்று தெரியவந்துள்ளது. இதில், சிறுமி ஒருவர் உயிரிழந்தார். ஏனைய மூவரும் காயங்களுக்கு உள்ளாகினர்.

தென்மராட்சி – மந்துவிலைச் சேர்ந்த எஸ்.தனுஷ்கா என்ற சிறுமியே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### நாடு திரும்பியதும்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் யார் உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்படுகின்றார்கள் என்பதில் பல்வேறு சந்தேகங்கள் உள்ளன. சுய அரசியல் நலன்களுக்காகவே பலரும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுகின்றனர். ஆனால், அந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துச் செயற்படுகினறது. இந்த இலக்கை அடைவதற்கு அனைத்து தரப்பினருடனும் ஜனாதிபதி கலந்துரையாடுவார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திப்பதற்கான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோரிக்கை நிறைவேறும். தற்போது வெளிநாடு சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதும் தமிழரசுக் கட்சியைச் சந்திப்பதற்கான திகதியை வழங்குவார். எனினும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான ஈடுபாடுக்கும் சுய அரசியல் நலன்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை அனைவரும் உணர வேண்டும். எவ்வாறாயினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இனப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்து கலந்துரையாடுவதற்காக, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு உத்தியோகபூர்வமாகக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி அனுப்பப்பட்ட இந்தக் கடிதம், ஜனாதிபதியுடன் தமது கட்சி கடைசியாக நடத்திய பேச்சுவார்த்தை இடம்பெற்று வருடம் கடந்துவிட்டதைச் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது." – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

ஏற்றுமதிப் பொருளாதாரத்தை விரைந்து மேம்படுத்த முடியாத பின்புலத்தில், உல்லாசப் பயண துறையை ஊக்கு விப்பதன் மூலம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குக் கவர்ந்து இழுத்து, அதன் மூலம் அந்நிய செலா வணியை உயர்த்திக்கொள்ள முயற்சி எடுத்து இருக்கின்றது.

இந்த ஆண்டில் 30 லட்சம் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் கவருவதற்கு அரசு திட்டமிட்டது. ஆனாலும் விமான நிலைய இடைஞ்சல்கள் மற்றும் காரணி கள் காரணமாக அது 25 லட்சத்துக்கு அப்பால் செல்லாது என்று இப்போது கணக்கிடப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளின் போக்கு வரத்து விடயத்தில் கட்டுநாயக்கா சர்வ தேச விமான நிலையம் கடும் நெருக்க டியை எதிர்கொள்ளுகின்றது. அதனால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை நாடு இழக்கும் அவலத்தை எதிர்கொள்கிறது.

இத்தகைய நெருக்கடியைச் சமாளிப் பதற்கு நாட்டுக்குள் சுற்றுலா பயணிகள் நுழையும் வாசல்களை அகலத் திறந்து விடுவதுதான் முக்கியமான ஒரே வழியாக இருக்க முடியும்.

கட்டுநாயக்கா விமான நிலையம் முழுமையாக சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு ஒத்துழைக்க முடியாத அள வுக்கு நிரம்பி வழிவதால், மாற்று மார்க்க மாக வடக்கின் நுழைவாயில்கள் என்று கருதப்படும் பலாலி விமான நிலையத்தையும் காங்கேசன்துறை துறைமுகத்தையும் அதிகம் பயன் படுத்த முடியும்.

அதுவும் இலங்கைக்கு வருடாந்தம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளில் அதிக எண்ணிக்கையானோர் இந்தி யர்கள் என்ற பின்புலத்தில் வடக்கின் இந்த இரண்டு நுழைவாயில்களையும் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுலாப் பயணத் துறையையும் நாட்டின் அந்நிய செலாவணி வருமானத்தையும் பெருமளவில் அதிகரிக்க முடியும்.

ஆனால் இந்த இரண்டு நுழை வாயில்களையும் – பலாலியையும் காங் கேசன்துறையையும் – மேம்படுத்தி சுற்று லாப் பயணிகளை கவருகின்ற வகை யில் அவற்றைத் தரம் உயர்த்துவதற்கு இடைஞ்சலாக நந்தி போல வந்து குந்தி இருக்கிறார் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களுக்கும் பொறுப்பான அமைச்சர் பிமல் ரத்நாயக்கா.

இந்த இரண்டு நுழைவாயில்களையும் தனது உதவி திட்டமாக மேம்படுத்தி தருவதற்கு இந்தியாவே தானாக முன் வந்திருந்த நிலையில், அதற்கு இடக்குப் போட்டுத் தடை விதித்திருக்கிறார் அமைச் சர் பிமல் ரத்நாயக்கா.

பொருளாதாரச் சாத்தியமில்லை என்றும், அதுபோன்ற இன்னொரன்ன காரணங்களையும் அவர் வெளியிட்டா லும், வடக்கில் – தமிழர் தேசத்தில் – இரண்டு சர்வதேச நுழைவாயில்கள் மேம்பாடு அடைவதை விரும்பாத பௌத்த, சிங்கள மேலாதிக்கப் பேரின வாத சிந்தனை மட்டுமே அதற்குக் காரணம் என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்காவுக்கும், அநுர குமார திஸநாயக்கவின் அரசுக்கும் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறோம்.

இப்போது உல்லாசப் பயணத் துறையை இலங்கை அதிகம் நம்பி இருப்பது போல மாலைதீவும் அந்தத் துறையையே அதிகம் நம்பி இருந்தது. இருக்கின்றது. அப்படி நம்பி இருந்து கொண்டு சீனாவுடன் சேர்ந்து இந்தியா வுக்கு எதிராக அந்த நாட்டின் புதிய அரசு 'மக்கர்' பண்ண ஆரம்பித்ததும் இந்தியச் சுற்றுலா பயணிகளின் வருகை மாலை தீவில் பெரு வீழ்ச்சி கண்டது. அதன் விளைவால் கலங்கிப் போன மாலைதீவு இந்தியாவின் கால்களில், கைகளில் விழுந்து மீண்டும் சுற்றுலாப் பயணிகளை அனுப்புங்கள் என்று கெஞ்ச வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இலங்கை இந்த முன்னுதாரணத்தை – கண்ணுக்கு முன்னால் நடந்த விட யத்தை – சற்றுக் கவனத்தில் எடுத்துக் கொள்வது நல்லது.

இலங்கை பொருளாதார நிலையில் தான் நின்று பிடிப்பதற்கு, சுற்றுலாப் பயண துறையிலேயே மிக முக்கியமாக இன்று தங்கியுள்ளது. அப்படி இலங் கைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணி களில் பெரும் எண்ணிக்கையானோர் இந்தியர்கள். இந்நிலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஒட்டிய தேவையை நிறைவு செய்ய முடியாமல் கட்டுநாயக்கா விமான நிலையம் நிரம்பி வழிகின்றது. இந்தப் பின்புலத்தில் இந் திய உதவியுடன் வருகின்ற பலாலி மற்றும் காங்கேசன்துறை மேம்பாடுகளை மேற்கொள்ள மறுத்து, இந்தியாவுடன் நேரடியாக மோதும் முரண்பாட்டு நிலையை பிமல் ரத்நாயக்கா போன் றோர் தொடர்வார்களாயின் சுற்றுலா பயணிகள் விடயத்தில் மாலைதீவுக்கு ஏற்பட்ட அனுபவத்தை இலங்கை எதிர் கொள்ள வேண்டி இருக்கும்.

நேரத்துடன் இதனை எச்சரித்து வைப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

## அன்று காற்றாலை...

“மன்னார் மாவட்டத்தில் காற்றாலை பிரச்சினை தற்போது பூதாகரமாக உரு வாகியுள்ளது.

மன்னாருக்குக் காற்றாலை இயந் திரங்களுக்கான உபகரணங்களைக் கொண்டு வருகின்ற போது அங்கு இருக் கின்ற மக்கள் போராடியதாகவும், போராட் டக்காரர்கள் மீது பொலிஸார் வன் முறையை ஏவி விட்டு அடித்து நொறுக்கி யதாகவும் கூறப்படுகின்றது. பெரிய அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்ட தாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பிரச்சினை என்பது ஜனாதிபதி மற்றும் அதற்குரிய அமைச்சர் அனைவ ரோடும் பேசப்பட்டது. கலந்துரையாடப் பட்டபோது எடுக்கப்பட்ட முடிவுகளின்படி தற்போது அமைக்க இருக்கின்ற 14 காற் றாலை கோபுரங்களுக்கும் குழிகள் தோண டப்பட்டு இருக்கின்றன.

அடிக்கட்டுமான வேலைகள் முடிக் கப்பட்டு இருக்கின்றன. அவற்றுக்குப் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா பணம் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றை நிர்மாணிப்பதற்கான பணிகள் மாத்திரமே மிச்சமிருக்கின்றன.

அந்தப் பணிகளைச் செய்து முடிப் பதற்கான சந்தர்ப்பத்தை தருமாறு மக்க ளிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இன்றைக்கு இதனைப் பூதாகரமான போராட்டமாகக் கிளப்புவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்தி வருகின்றவர்கள் யார் என்று பார்த்தால், முன்னர் அந்த மாவட் டத்தில் காற்றாலை மின் நிலையத்தை அமைத்து கோபுரங்களைச் சென்று திறந்து வைத்தவர்கள், அதற்குப் பின் னால் நின்று வக்காலத்து வாங்கியவர்கள், மக்களிடம் காணிகளை வாங்கிக் கொடுத்த வர்கள், அந்த நிறுவனங்களோடு கொடுக் கல் வாங்கலைச் செய்தவர்களே இன்று இந்தப்போராட்டத்தின்பின்னால்இருக்கின் றார்கள்.

இதை நான் சொல்லவில்லை. சமூக வலைத்தளங்கள் நேரடியாக இதனை அம்பலமாக்கிக் கொண்டிருக்கின்றன. இந்தப் போராட்டம் என்பது யாருக்காக? எதற்காக மன்னரை மீட்பதற்காகவா? மன்னாரை மீட்பதில் எங்களை விட அக்கறை கொள்வதற்கு வேறு யாரும் இல்லை.

மன்னாருக்கு அதிகளவான பாதிப்பு ஏற்படுவது கனிய மண் அகழ்வின் மூலமே தான். அந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்தி இருக்கின்றோம். காற்றாலை மின் நிலை யம் அமைப்பது என்பது அது செய்து முடித்த வேலை. அதனால் மக்களிடம் நாம் ஒன்றைக் கேட்கின்றோம்.

உலகம் முழுவதும் தேடிப் பார்க்கின்ற போது இலங்கையில் இதற்கு முன்னர் அமைக்கப்பட்டுள்ள காற்றாலை கோபு ரங்களைச் சென்று பாருங்கள். அந்தப் பிரதேசங்களைச் சென்று பாருங்கள். அந்தப் பிரதேசத்தில் மீன்கள் வரவில் லையா? உயிரினங்கள் வரவில்லையா? பறவைகள் வரவில்லையா? இயற்கைக்கு மாசு ஏதும் ஏற்பட்டிருக்கின்றதா என்ப தைப் பாருங்கள்.

அவ்வாறு மாசு ஏற்பட்டிருக்குமாக இருந்தால் – தாக்கம் ஏற்பட்டிருக்குமாக இருந்தால் அது விஞ்ஞான ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் நிரூபிக்கப்படுமாக இருந்தால் நாங்களும் உங்களோடு சேர்ந்து போராடுவதற்குத் தயார்.” – என்றார்.

## காற்றாலை...

“மன்னார் மாவட்ட மக்கள் இன்று திங் கட்கிழமை அனைத்து செயற்பாடுகளை யும் நிறுத்த வேண்டும், போக்குவரத்துச் சேவையை நிறுத்துவதுடன், வர்த்தக நிலை யங்களையும் மூடி மாவட்டத்தை ஸ்தம்பி தம் அடையச் செய்து எங்கள் போராட் டத்துக்கு வலுச் சேர்க்க வேண்டுகின் றோம்.” – என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

“அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுவோரும் கடமைகளுக்குச் செல் லாமல் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.” – என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

“இதேநேரம், இன்று முற்பகல் 10 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து கண்டனப் பேரணி ஆரம்பமாகும். இந்தப் பேரணி மன் னார் பஜார் பகுதியை அடைந்து, அங்கு எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பப் படும். மதியம் 1.30 மணி வரை இந்தப் பேரணி நடைபெறும். இறுதியாக, ஜனாதி பதிக்கான கோரிக்கைகள் அடங்கிய மனு மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் கைய ளிக்கப்படும்.” – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# கலைமகள் துதி

## திருவடி சரணம் கலைகளின் தாயே!

கற்பன யாவும் கற்றிட வேண்டும்
கசடுகள் அகலக் கற்றிட வேண்டும்
கண்ணியம் நிறையக் கற்றிட வேண்டும்
கையணைத் திடுவாய் கலைமகள் தாயே

கற்றிடும் தலைமுறை பெருகிட வேண்டும்
கற்றிடும் வகையில் நின்றிட வேண்டும்
கற்றிடும் அனைவரும் கடவுளை எண்ணி
கருமங்கள் ஆற்றிட வைத்திடு தாயே

கல்வியைக் காசாய் ஆக்கிறார் தாயே
கற்றுக் கொடுப்பார் கயவர்கள் ஆகிறார்
கல்விக் கூடங்கள் கண்ணியம் காத்திட
கலைமகள் தாயே கருணையைக் காட்டு

வற்றிடாக் கல்வியை வழங்கிடு தாயே
மனமதில் மாசினைப் போக்கிடு தாயே
தினமுமே உன்னைத் தொழுகிறோம் தாயே
திருவடி சரணம் கலைகளத் தாயே

வெள்ளைக் கமலம் இருப்பிடம் கொண்டாய்
விரும்பி ஏட்டினைக் கையினிற் பிடித்தாய்
உள்ளம் விரும்பிட படைப்பவன் நாவில்
வெள்ளை உடையுடன் அமர்ந்தாய் சரணம்

கலைகளின் தாயே சரணம் சரணம்
நிலை குலையாமல் காத்திடு அம்மா
உலகிடை உயர்ந்தோர் போற்றிட அறிவை
தந்திடு சரஸ்வதித் தாயே சரணம்



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேண் - ஆஸ்திரேலியா



# 24 மணிநேரமும் பொய்களை பரப்பும் அநுரவின் அரசாங்கம்

## சஜித் கடும் விமர்சனம்

"ஜனாதிபதி அநுரவின் அரசு 24 மணிநேரமும் பொய்களைப் பரப்புகின்றது. பொய்களையே கொள்கையாகக் கொண்டிருக்கின்றது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரச தரப்பினர் பொய்களாலும், குழப்பங்களாலும் மக்களை ஏமாற்றுவதில் வல்லவர்கள். இவ்வாறான ஏமாற்றுக் செயற்பாடுகளால் தம்மைத் தக்கவைத்துள்ளனர். 24 மணி நேரமும் இவ்வாறு பொய் பேசும் அரசு இலங்கையில் இதுவரை இருந்ததில்லை. பொய்கள் மட்டும்தான் அரசின் பிரதான கொள்கையாக மாறியுள்ளன.

அண்மைக்காலமாக போதைப்பொருள்கள் பெருமளவில் கைப்பற்றப்படுகின்றன. இது தொடர்பில் அரசால் பல்வேறு பரப்புரைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. போதைப்பொருள் காரணமாக நாடும் சீரழிந்து வருகிறது. எனவே, அவற்றைக் கண்டுபிடித்து அழிப்பது சிறந்த செயலாகும்.

அதேநேரம், துறைமுகத்தில் இருந்து அனுமதியில்லாமல் கொள்கலன்களை விடுவித்த விவகாரம் தொடர்பில் அரசு மௌனமாக உள்ளது.

மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் இந்த அரசுக்கு மக்கள் தீர்ப்பளிக்கும் நேரம் வந்துவிட்டது. மாகாண சபைத் தேர்தலில் பொய், மோசடி, குழப்பம், ஏமாற்றுதல் ஆகியவற்றைத் தோற்கடிக்குமாறு மக்களிடம் கோருகின்றோம்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மன்னாரில்...**

நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பைச் சேர்ந்த டபிள்யூ.எம்.ஏ. சரத் அந்தோனி (வயது 60) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி நேற்றுக் காலை பயணித்த ரயில், சௌத் பார் ரயில் நிலையத்தில் தரித்து நின்று மீண்டும் பயணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிப் பயணித்தது.

இதன்போது சௌத்பார் – தள்ளாடி ரயில் வீதி, இரட்டை கண் பாலத்துக்கு அருகில் ரயிலில் மோதி உடல் பாகங்கள் சிதறிய நிலையில் சடலம் காணப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து சடலத்தை மீட்டனர்.

பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த திடீர் மரண விசாரணை அதிகாரி பி.பிரபா நந்தன் சடலத்தைபி பார்வையிட்டார்.

சடலமாகக் கிடந்தவரின் உடமையில் இருந்து மீட்கப்பட்ட தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் ஆகிய வற்றை வைத்து அந்த நபர் டபிள்யூ.எம்.ஏ. சரத் அந்தோனி (வயது 60) எனவும், நீர்கொழும்பைச் சேர்ந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டது.

அவரது உடமையில் இருந்து ஒரு தொகை பணம் மற்றும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 27ஆம் திகதியிடப்பட்ட தலைமன்னாருக்கெனப் பெற்றுக்கொள்ளப்பட்ட 205 ரூபாவுக் கான ரயில் டிக்கெட் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மன்னார் வைத்தியசாலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினராக சிவாஜிலிங்கம் பதவியேற்கும் சாத்தியம்

வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினரான அப்புலிங்கம் உதயசூரியன் தனது பதவியை இராஜினாமா செய்திருந்த நிலையில். அது ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு நகர பிதாவாக வருவதற்கான சாத்திய கூறுகள் தென்படுவதாக அறிய முடிகிறது.

தமிழ் தேசிய பேரவை வல்வெட்டித்துறை நகர சபையை ஆக்கிரமித்துள்ள நிலையில் அதன் உறுப்பினரான அப்புலிங்கம் உதயசூரியன் என்பவர் தனது இராஜினாமா கடிதத்தை நேற்று அனுப்பி வைத்த நிலையில், அது ஏற்றுக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து எம். கே. சிவாஜிலிங்கம் நகர சபை உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்யப்பட்டு பின்னர் நகர பிதாவாக வரவுள்ளார் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இலங்கைக்கு அவசியம்

## சட்டக் கல்லூரியின் முதல்வர் சுட்டிக்காட்டு



இலங்கையின் இயல்புகளைக் கருத்திற்கொள்ளும்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மிகவும் அவசியமானது என்று இலங்கை சட்டக் கல்லூரியின் முதல்வர் பிரஷாந்த லால் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துடன் இணைந்த முறையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும். இலங்கையின் அரசியல் வரலாற்றில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட இறுதி ஜனாதிபதியாக அநுரவே இருப்பார் என்று தேசிய மக்கள் சக்தி அரசு அண்மையில் தெரிவித்துள்ளது. இவ்வாறான பின்னணியிலேயே, இலங்கைக்கு நிறைவேற்று அதிகார முறைமை அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை சட்டக் கல்லூரியின் முதல்வர் பிரஷாந்த லால் டி அல்விஸ் இது தொடர்பில் ஊடங்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டின் பல்வேறு இனக்குழுக்களிடையே ஒற்றுமையைப் பேணுவதற்கும், வெளிநாட்டு செல்வாக்குகளைத் தடுப்பதற்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முக்கியமானது. எனவே, அதை இரத்துச் செய்வது தொடர்பில் சிந்திக்கக்கூடாது. அதே நேரம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வருபவர்கள், அந்த அதிகாரத்தை நல்ல முறையில் பயன்படுத்துவது அவசியம்." - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நெய்க்கு அலையும் அநுரா!

'கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலையாதே' என்றொரு பழமொழி நம் மத்தியில் உண்டு.

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அமெரிக்காவுக்குப் போய் நியூயோக்கில் இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றிய சமயம் கூறிய விடயங்கள், கையில் நெய்யை வைத்துக் கொண்டு அவர் வெண்ணெய்க்கு அலைகிறார் என்று சிந்தனையைதான் தந்து நிற்கின்றன.

கடந்த வியாழக்கிழமை, அமெரிக்காவின் ஸ்டேட்டன் தீவின் கலைக் கல்லூரியின் மையத்தில், நிரம்பியிருந்த இலங்கையர்களின் முன் பேசிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, நாட்டில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதிலும், முதலீடுகளை அதிகரிப்பதிலும், தாய் நாட்டுடனான உறவுகளை வலுப்படுத்துவதிலும் புலம்பெயர்ந்தோர் தீவிரப் பங்காற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தீவிரமாக பங்களிக்க வேண்டும் என்று அவர் வலுவான வேண்டுகோள் விடுத்தார். அவர்களின் பங்களிப்பு தொண்டு மூலம் அல்ல, மாறாக முதலீடு மற்றும் ஈடுபாடு மூலம் பெறப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் இலங்கைக்கு அவசரமாக - அவசியமாக - தேவைப்படுகின்ற விடயத்தை அவர் அங்கு வலியுறுத்தினார் என்பதில் இரண்டு கருத்து இல்லை.

ஆனால், இந்த விடயங்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பைக் கையில் வைத்துக்கொண்டு அவர் அங்கு அதனை தேடி அலைகின்றமைதான் வேடிக்கையானது.

யுத்தத்தினாலும் பிற காரணங்களினாலும் நாட்டை விட்டு வெளியேறிய வலுவான புலம்பெயர் தமிழர் சமூகம் ஒன்று ஜனாதிபதி இன்று எதிர்பார்க்கின்ற விடயங்களுக்கான முழுவளத்துடன் உலக நாடுகள் எங்கும் பரந்து வியாபித்து நிலை கொண்டிருக்கின்றது.

இலங்கையில் முதலீடு செய்யவும், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் சுற்றுலாத்துறை போன்ற துறைகளை வலிமைப்படுத்தவும் கூடிய வளத்துடன் புலம்பெயர் தமிழர் சமூகம் அதற்காகக் காத்திருக்கிறது.

அவர்கள் நாட்டில் வந்து முதலீடு செய்யவும் நாட்டை மேம்படுத்தவும் வசதியான சூழலை ஏற்படுத்தினால் அந்தப் பெரும்பலம் நாட்டுக்குக் கிடைக்கும்.

ஆனால் விடயங்களை பௌத்த - சிங்கள மேலாதிக்க, மேலாண்மை எதேச்சாதிகார சிந்தனையில் இருந்தபடி அணுகிக் கொண்டு, அந்த அடக்குமுறை ஆட்சியை தொடர்ந்தபடி இருந்தால், வலிமையான புலம்பெயர் தமிழ் சமூகம் நாட்டின் பக்கம் திரும்பிப் பார்க்கப் போவதில்லை.

இந்த இலங்கைத் தீவின் சகல இன மக்களையும் சமனாக பாவிக்கின்ற - இனப் பாகுபாடு காட்டாமல் ஒரே முறையில் பரிபாலிக்கின்ற - ஓர் ஆட்சி முறை நாட்டில் இருக்கும் என்பதை ஜனாதிபதியும் அவரது ஆட்சித் தரப்பும் உறுதிப்படுத்தினால், வெளிநாட்டு முதலீடுகளுக்கும், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களுக்கும், அந்நிய செலாவணி வருகைக்கும், அப்படி ஜனாதிபதி நாடு நாடாகச் சென்று அழைப்பு விடுத்து, கெஞ்சத் தேவையில்லை. வலிமை மிக்க தமிழ்ப் புலம்பெயர் சமூகமே நாட்டை மேம்படுத்தித் தருகின்ற தலையாய பணியை முன்னெடுக்கும்.

இந்த நாட்டில் சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களுக்கு நீதி செய்கின்ற - நியாயமான ஆட்சி முறையை வழங்குகின்ற - தமிழர்களும் இந்த நாட்டின் சமத்துவமான முறையில் கௌரவமான பிரஜைகளாக மதிக்கப்படுகின்ற - நிலைமையை ஜனாதிபதி ஏற்படுத்துவாராயின் அவர் இப்படி நாடுகளில் போய் அங்குள்ள புலம்பெயர் சமூகங்களைக் இறைஞ்சத் தேவை இல்லை.

மாறாக, கையில் வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கு அலையும் வேலையைத்தான் அவர் செய்து கொண்டிருக்கிறார்.




# 2026 வரவு – செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சுக்கே அதிக நிதி!

## பாதுகாப்பு அமைச்சுக்கு ரூபா 455 பில்லியன்

தேசியமக்கள்சக்திஅரசின்,2026ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில், உச்சபட்சமாக நிதி அமைச்சுக்கு 618 பில்லியன் ரூபாவும், பாதுகாப்பு அமைச்சுக்கு 455 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட வரைவு நாடாளுமன்றத்தில் நேற்று பதில் நிதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோவால் சமர்ப்பிக்கப்பட்டது. அதில், 2026ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்டத்தில் அரசின் ஒட்டுமொத்த செலவீனமாக 4 ஆயிரத்து 434 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

வரவு – செலவுத் திட்டம் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அமைப்பின்படி, 634 பில்லியன் ரூபா நிதி நிதியமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வரவு – செலவுத்திட்டத்தில் ஒரு துறைக்கு அல்லது அமைச்சு ஒதுக்கப்பட்ட அதிகபட்ச நிதியாக இது பதிவாகியுள்ளது.

நிதி அமைச்சுக்கு அடுத்தபடியாக உள்ளூராட்சி சபை மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்கு 618 பில்லியன் ரூபாவும், பொதுநிர்வாக அமைச்சுக்கு 596 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாதுகாப்பு அமைச்சுக்கு 455 பில்லியன் ரூபாவும், சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்கு 554 பில்லியன் ரூபாவும், கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சுக்கு 301 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி நிதி அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இது இரண்டாவது வாசிப்பாகக் கருதப்படும்.

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் எதிர்வரும் நவம்பர் 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெறும். 14ஆம் திகதி மாலை 2ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நவம்பர் 15ஆம் திகதி ஆரம்பமாகும். பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் 5ஆம் திகதி நடைபெறும்.



# தொழிலுக்கு சென்ற விவசாயி உயிரிழப்பு

கமத் தொழிலுக்கு சென்ற விவசாயி ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கண்டி வீதி, அரியாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி இராஜபாரதி (வயது 60) என்பவராவார்.

மேற்படி குடும்பஸ்தர் அரியாலை நாவலடிப் பகுதியில் கமத் தொழில் செய்வதற்காக நேற்று முன்தினம் சனிக்கிழமை சென்றிருந்த நிலையில், அவரைக் காணவில்லை என தேடிய போது மாலை அப்பகுதியில் உள்ள ஆலயத்திற்கு அருகாமையில் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை சம்பவ இடத்துக்கு சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை யாழ்ப்பாணப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.




# யாழ்ப்பாணம் பழைய பூங்காவின் எஞ்சிய பகுதியும் அழியும் ஆபத்து!

**- நடராசா லோகதயாளன் -**

யாழ்ப்பாணம் பழைய பூங்காவின் எஞ்சிய பகுதியும் அழியும் ஆபத்தில் அங்கே காணப்படும் 9.67 ஹெக்டேயரில் 5.67 ஹெக்டேயர் நிலமே மாவட்டச் செயலகத்திடம் இருப்பமாக பதிலளித்தாலும் இந்த நிலத்திற்கான ஆவணங்கள் அவர்களின் கை வசம் இல்லை என்பது எழுத்தில் வழங்கும் பதிலின் மூலம் கண்கூடாகத் தெரிகின்றது.

மாவட்டச் செயலாளருக்கு ஒரு விடுதி, ஆளுநருக்கு ஒரு விடுதி என்றெல்லாம் அமைத்தபோது வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கும் ஓர் விடுதி கட்ட இங்கே இடம் தாருங்கள் என முன்னாள் வடக்கு மாகாண பிரதம செயலாளரான அ.பத்திநாதனால் கோரப்பட்டது. அந்தக் கோரிக்கைக்கு பழைய பூங்காவில் இனிக் கட்டடங்கள் அமைக்க அனுமதிக்கப்பட மாட்டாது என மாவட்டச் செயலகம் பதிலளித்தபோது பூங்காவின் முக்கியத்துவத்தை உணர்ந்து விட்டனரோ என எண்ணத் தோன்றியது. ஆனால் அதன் பின்பும் அங்கே தேர்தல் செயலகம் உட்பட்ட கட்டுமானங்கள் அமைக்கப்பட்டதன் மூலம் பூங்கா மீது எள்ளளவும் கரிசணை கிடையாது என்பது நிரூபணமாகியது.

பழைய பூங்காவில் சுமார் 400 வருடங்கள் பழமை வாய்ந்த மரங்கள் காணப்பட்டன. பல்லாயிரக் கணக்கான வெளவால்களின் வாழ்விடமாக 2010 வரை காணப்பட்ட பகுதியில் இருந்து தினமும் மாலை 6 மணி என்றால் ஆயிரக் கணக்கான வெளவால்கள் திருநெல்வேலி, கொக்குவில்,



கோண்டாவில் ஊடாக இரை தேடிப் பறந்த அழகு இன்றும் பலரின் மனக் கண் முன்னே உண்டு.

இந்த வெளவால்களை அழிக்க இரகசிய திட்டமிடப்பட்டு முன்னாள் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் மெய்ப்பாதுகாவலர்கள் மூலம் சுட்டு அழிக்கப்பட்டபோது பல ஆர்வலர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பியம்சியோடு அப் பணி கை விடப்பட்டது. ஆனால் இன்று அங்கே வெளவால்களின் அமைதியான வாழ்வும் குலைக்ப்பட்டு விட்டது.

1990 ஆம் ஆண்டு இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்த சமயம் அரசின் இறுக்கமான பொருளாதாரத் தடையின் காரணமாக பசளைகள் எடுத்து வருவதும் முற்றாகத் தடைப்பட்டது. இதன்போது ஒரு மூடை

தொடர்ச்சி▼





# யாழ்ப்பாணம் பழைய பூங்காவின் எஞ்சிய பகுதியும் அழியும் ஆபத்து!

தொடர்ச்சி▲

வெளவால் எச்சம் இரண்டு அல்லது மூன்று மூடை யூரியாவிற்கு ஒப்பானது என்ற தகவல் தெரிந்த விவசாயிகள் பலர் இந்த வெளவால் எச்சத்திற்காக பழைய பூங்காவிற்கு படையெடுத்த வரலாறுகளும் உண்டு.

இவ்வாறு நகரின உயிர் மூச்சுக்களில் ஒன்றாகக் காட்சி தரும் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைவது தொடர்பில் சுற்றுச் சூழல் ஆர்வலரும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவருமான பொன்னுத்துரை ஐங்கரநேசன் கருத்து தெரிவிக்கையில் –

உலக நாடுகள் பல நகரின் மத்தியில் வாயுப் பரிமாற்றத்திற்காக குறுங் காடுகள் அமைக்கும் காலத்தில் நாம் இருக்கும் காடுகளையும் தொலைத்து விட்டிருக்கின்றோம். பூங்காக்கள் என்பது ஓர் மனமகிழ்ச்சிக்கான இடங்களாக மட்டுமே காட்சி தரும். இவை அபிவிருத்தின் பெயரால் இடம்பெறும் எகத்தாள அட்டூழியங்கள். கிடைக்கின்ற நிதிக்கு நீண்டகாலத் திட்டங்களை மேற்கொள்ளத் தெரியாத அதிகாரிகள், அடுத்த வளவிலேயே செலவு செய்ய வெளிக்கிட்டால் இவ்வாறான நிலைதான் ஏற்படும். அனைத்தையும் நகரின் மத்தியில் அமைத்து நெருக்கடியை ஏற்படுத்தாமல் அதனை சற்றுத் தொலைவிற்கு அல்லது சாவகச்சேரி மக்களும் பயன்பெறும் வகையிலும் அமைக்க முடியும். – என்றார்.

சுற்றுச் சூழல் ஆர்வலர் இந்த விடயத்தை கூறினாலும் சுற்றுச் சூழல் அதிகார சபையினதோ அல்லது உள்ளூர் அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை எவற்றினதும் ஒப்புதல் மற்றும் சாத்தியப்பாட்டு அறிக்கைகள்கூடப் பெற்றுக்கொள்ளாதமை மட்டுமல்ல, குறைந்தபட்சம் சட்ட வலுவற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலேனும் பிரஸ்தாபிக்காது, 40 மில்லியன் ரூபாவில் உள்ளக விளையாட்டரங்கு என செய்தி வெளியிடப்பட்டுவிட்டது.

இது பெரும் விமர்சனத்தை தோற்றுவிக்க காரணமாக அமைகின்றது.

(தொடரும்)



# அரச அலுவலர்கள் தினசரி 6 மணி நேரம் பயணித்து வினைத்திறனாகப் பணியாற்றுவது சாத்தியமானதா?

## மன்னார், முல்லைத்தீவு நிலைமை குறித்துக் கேள்வி

(த.சுபேசன்)

வடக்கு மாகாணத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் தினமும் ஆறு மணி நேரம் வரை பஸ்ஸில் பிரயாணம் செய்து விட்டு எவ்வாறு அவர்களால் கடமையை செய்ய இயலும் என கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் நடராசா சச்சிதானந்தன் ஆளுங்கட்சி உறுப்பினர்களை நோக்கிக் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மன்னாரில் இடம்பெற்ற கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் கலந்துரையாடலின் போதே அவர் அமைச்சர் சந்திரசேகரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆகியோரிடம் இந்தக் கேள்வியினை எழுப்பியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றும் பெரும்பாலான உத்தியோகத்தர்கள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அதே நேரம் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பெரும்பாலும் யாழ் மாவட்ட அரச உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனர்.

இவர்கள் தினமும் சுமார் ஆறு மணி நேரம் பிரயாணம் செய்ய வேண்டிய தேவை உள்ளது.தினமும் ஆறு மணி நேரம் பிரயாணம் செய்பவர்களால் கடமையில் முழுமையான ஈடுபாடு கொடுக்க இயலாது.

குறிப்பாக பெரும்பாலான ஆசிரியர்கள் இவ்வாறு அதிக தூரம் பிரயாணம் செய்து கற்பிக்கின்றனர். இவ்வாறான நிலையில் அவர்களால் முழு உற்சாகத்தோடு கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட இயலாது.

எனவே அரசாங்கம் மன்னார் மற்றும் முல்லைத்தீவில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் நலன் கருதியும் – அவர்களிடம் சேவையைப் பெறுகின்ற மக்களுடைய நலன் கருதியும் யாழில் இருந்து மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு விரைவு ரயில் அல்லது உத்தியோகத்தர்களுக்கான பிரத்தியேக பஸ் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.



இதனூடாக பெருமளவு நேரத்தை உத்தியோகத்தர்கள் மீதப்படுத்துவதுடன் வினைத்திறனான சேவையையும் ஆற்ற முடியும்.

இவ் விடயம் தொடர்பாக கூட்டத்தில் உள்ள அமைச்சர் சந்திரசேகரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆகியோர் கவனஞ்செலுத்த வேண்டும்.” – என மேலும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

# 11 வருடங்களாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பெண் வியாபாரிக்கு விளக்கமறியல்

## காத்தான்குடியில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, காத்தான்குடியில் 11 வருடங்களாகப் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த – 6 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட – பிரபல பெண் போதைப்பொருள் வியாபாரியை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து காத்தான்குடி 6 ஆம் பிரிவு ஜின்னா மாவத்தையிலுள்ள வீடு ஒன்றை கடந்த 22 ஆம் திகதி பொலிஸெ முற்றுகையிட்டு போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பெண் வியாபாரியை 6 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்தனர்

அவரைக் கைது செய்து நடத்திய விசாரணையை அடுத்து அவர் வழங்கிய தகவலுக்கு அமைய காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த 4 பேர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டமையை அடுத்து அவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட பெண் வியாபாரி கடந்த 11 வருடங்களாகப் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு



வந்துள்ளார் எனவும், இதுவரை அவர் பொலிஸாரினால் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தப் பெண் வியாபாரியை நேற்று ஞாயிற்றுக்கிழமை வரை 5 நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்ற அனுமதி பெற்று, அவரைப் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டனர்.

இதனையடுத்து நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் அவர் ஆஜர்படுத்தப்பட்டமையை அடுத்து அவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 105 வர்த்தக நிலையங்களில் சோதனை

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்த 105 வர்த்தக நிலையங்களில் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்தது.

கடந்த இரு வாரங்களாக நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில். மேற்படி வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்தது.



# வீதி புனரமைப்புக்கு அரசு ஒதுக்கிய 46 மில்லியன் ரூபா செட்டிக்குளம் பிரதேச சபையால் திருப்பியனுப்பப்பட்டது

## நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் அதிர்ச்சித் தகவல்




(கி.வசந்தன்)

தேசிய மக்கள் சக்தி அரசால் கிராமப் புற வீதி புனரமைப்பிற்காக செட்டிக்குளம் பிரதேச சபைக்கு அனுப்பிய 46 மில்லியன் ரூபா நிதியை பிரதேச சபை திருப்பி அனுப்பியுள்ளது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அவர் தெரிவிக்கையில்,

“வவுனியா மாவட்டத்துக்கு கடந்த வரவு - செலவுத் திட்டத்திலே வீதிகளைப் புனரமைப்பதற்காக 1,200 மில்லியன் ரூபாவும், அதனை விட மேலதிகமாக 113 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எங்களது வேண்டுகோளிற்கு அமைவாக 200 மில்லயன் ரூபா கிராமப்புற வீதிகளை புனரமைப்பதற்காக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதிகள் அனைத்துமே பிரதேச சபைகளுக்குப் பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளன. மேலும் இறுதியாக கிடைக்கப் பெற்ற 200 மில்லியன் ரூபா நிதி கிரவல் வீதிகளை அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியானது வவுனியா மாவட்டத்திலே காணப்படுகின்ற அனைத்து பிரதேச சபைகளிற்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளன. அந்தவகையிலே செட்டிக்குளம் பிரதேச சபைக்கு மாவட்ட செயலகத்தின் ஊடாக 46 வீதிகளைப் புனரமைப்பதற்காக 46 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தினால், பிரதேச செயலகம் ஊடாக கடந்த 18 ஆம் திகதி செட்டிக்குளம் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக வன்னி பிரதேசத்திலே நீண்ட காலமாக மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமத்திற்கு மத்தியிலேயே தங்களது போக்குவரத்து நடவடிக்கைகளை செய்திருந்தனர்.

இதனைக் கருத்தில்கொண்டு எமது தேசிய மக்கள் சக்தி அரசானது விசேடமாக வடக்கு மாகாணத்தில் பாதைகளைப் புனரமைப்பதற்கான நிதியை ஒதுக்கியிருந்தோம். இறுதியாக வந்த 200 மில்லியன் ரூபாவிலே 46 மில்லியன் ரூபா செட்டிக்குளம் பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட போதும் குறித்த பிரதேச சபை தவிசாளர் குறித்த நிதியை ஏற்க முடியாது என்ற ரீதியிலும், இந்த வேலைத் திட்டத்தைச் செய்ய முடியாது என்ற ரீதியிலும் பிரதேச செயலகத்துக்கு அறிவித்திருந்தார்.

மேலும் இது தொடர்பாக தேசிய மக்கள் சக்தியின் செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர்கள் தவிசாளரிடம் கேட்டபோது தான் அவ்வாறு செயற்படவில்லை எனவும், தனக்கு இந்த நிதி வந்ததே தெரியாது என்ற வகையிலே தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக ஆராய்ந்த போது தவிசாளரே கையொப்பமிட்டு குறித்த கடிதத்தைப் பெற்றுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.” - என்றார்.

# ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவன வருமானம் 10 வீதத்தால் அதிகரிப்பு




2025 முதல் 2026 வரையான நிதியாண்டின் முதல் 5 மாதங்களில் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் பயணிகள் வருமானம் 10 வீதத்தால் அதிகரித்துள்ளது.

தமது விமானங்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையும் 22 வீதத்தால் அதிகரித்துள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் விமான சேவையின் செயற்றிறன் 74 வீதமாக அதிகரித்துள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த வருடம் இது 69 வீதமாக பதிவாகியிருந்தது.

இயந்திரக் கோளாறு காரணமாக நீண்ட காலமாக சேவையில் இருந்து நீக்கப்பட்ட 02 விமானங்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனவும் அடுத்த வருட ஆரம்பத்தில் மற்றுமொரு விமானம் பழுதுபார்க்கப்பட்டு சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

# மன்னாரில் காற்றாலைகளை நிறுவுவதற்கு முன்னர் மக்களுடன் கலந்துரையாட அநுர அரசு வர வேண்டும்

## இல்லையேல் போராட்டம் தொடரும் என்று சிவகரன் எச்சரிக்கை



(எஸ்.ஆர்.லெம்பேட்)

"போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டுள்ளனர். ஒரு ஜனநாயக நாட்டில் உரிமை கேட்டுப் போராடுவது தவறா? போராட்டத்தின் ஊடாகவே ஜே.வி.பியினர் ஆட்சிக்கு வந்தார்கள்."

– இவ்வாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மன்னாரில் கடந்த 5 வருடங்களுக்குமேலாகபல்வேறுவிதமானபோராட்டங்களும், கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில், கடந்த மாதம் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அமைச்சர்களுடன் சந்திப்பும், 13 ஆம் திகதி ஜனாதிபதியுடனான சந்திப்பும் நடைபெற்ற பின்னர் ஒரு மாத காலம் இடைநிறுத்தப்பட்டிருந்த பணிகள் அதற்கு பின்னர் மாவட்டத்தில் இயங்குகின்ற அமைப்புக்களுடனான கலந்துரையாடல், பாதிக்கப்பட்ட தரப்புக்களுடன் 5 இடங்களில் கலந்துரையாடல் என இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து வருகை தந்த விசேட குழுக்களிடம் அமைப்புக்கள் ஊடாக கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. இவற்றை எல்லாம் பெற்றுக்கொண்டவர்கள், நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்குவது போல் ஜனாதிபதியினுடைய செயலாளர் கடந்த 22 ஆம் திகதி மின்சக்தி அமைச்சிற்கு கடிதம் எழுதியுள்ளார் 14 காற்றாலைகளையும் அதற்கான பணிகளை ஆரம்பிக்குமாறு அன்றைய தினமே மின் சக்தி அமைச்சின் செயலாளர் மன்னார் மாவட்ட செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். ஆகவே நீதிமன்றத்தின் தீர்ப்பு போல் மக்கள் மன்றங்களின் விவகாரங்களை அரசு கையாள நினைப்பது சர்வ அதிகாரத்தின் அதி உச்சமாக நாங்கள் பார்க்கின்றோம். ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்களுடைய வாதங்களைக் கேட்டு உணர்ந்தவர்கள் அந்த மக்களுடன் மீண்டும் கலந்தரையாடியே தீர்மானத்திற்கு அவர்கள் வந்திருக்க வேண்டும்.

நீங்கள் சொல்வதை சொல்லுங்கள். நாங்கள் நினைப்பதை தான் செய்வோம் என்றால் அரசு முற்று முழுதாக சர்வாதிகாரமாக தான் செயல் படுகிறதா?மக்களுடைய அடிப்படை கோட்பாட்டில் இருந்து விலகி கடந்த கால அரசுகள் மக்களுக்கு எதிராக சமூகத்திற்கு எதிரான நிலைப்பாட்டை கையில் எடுத்ததோ, அதே விடையத்தை அநுரவின் அரசும் முன்னெடுக்கின்றதா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

போராடுகின்ற மக்களைத் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்ற மக்களோடு, எந்தவிதமான உரையாடலும் மேற்கொள்ளாது அவர்கள் தாங்கள் நினைத்தது போல் இந்தத் திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றலாம் என்று அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

அதனடிப்படையில் நேற்று சனிக்கிழமை இரவு காற்றாலைக்கான உதிரிப்பாகங்களை மன்னாருக்குக் கொண்டு வந்துள்ளனர். இதன்போது அதற்கு எதிராக ஜனநாயக ரீதியாகப் போராடிய மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மிலேச்சத்தனமானது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டுள்ளனர். ஒரு ஜனநாயக நாட்டில் உரிமை கேட்டு போராடுவது தவறா? போராட்டத்தின் ஊடாக ஆட்சிக்கு வந்த ஒரு கட்சி என்றால் அது ஜே.வி.பிதான். அந்தநிலையில் இருந்து கொண்டு ஆட்சி சித்தாந்தத்தை ஏற்படுத்திய கட்சி இன்று அதே போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு நசுக்குவது என்பது உண்மையில் அவர்களின் மன நிலை என்ன?

யுத்த வெற்றி வாத மனோநிலையில் ராஜபக்ஷக்கள் எவ்வாறு செயலாற்றினர்களோ அந்த ராஜபக்ஷக்களை யுத்த வெற்றி வாத மனநிலைக்கு இட்டுச்சென்ற ஜே.வி.பியினரும் இன்றைய ஜனாதிபதியும் மிக முக்கியமானவர்கள். ஆகவே அதே மனநிலையில்தான் இன்றும் அவர்கள் தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள முனைகின்றார்கள் என்கின்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுகின்றது.

உங்களுடைய கட்சிக்கு கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்த மாவட்டத்தில் அதிகளவான மக்கள் வாக்களித்துள்ளனர். அந்த மக்களின் உணர்வுகளையும் கோரிக்கைகளையும் சற்று கூட புரிந்து கொள்ளாத இந்த அரசு தான்தோன்றித்தனமாக ஜனநாயக விரோத செயல்பாட்டில் ஈடுபடுகின்றது. நாட்டிற்கு ஜனாதிபதி வந்ததன் பின்னர் மக்களுடன் உரையாடி அவர்களினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தையும் எவ்வாறு நடை முறைப்படுத்த போகின்றீர்கள்?. நடைமுறைப் படுத்துகின்ற போது எழுகின்ற சவால்களுக்கு என்ன தீர்வு வைத்துள்ளீர்கள்?.

ஏற்கனவே 30 காற்றாலைகள் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பிரதேசங்களுக்கும் என்ன தீர்வு வைத்துள்ளீர்கள்?.இவற்றை எல்லாம் கலந்துரையாடி தான் அரசு அடுத்த கட்ட நகர்வுக்கு போக வேண்டுமே தவிர நாங்கள் நினைத்ததை தான் செய்வோம் என்றால் இது ஜனநாயக அரசும் இல்லை.


நாட்டின் கோட்பாட்டு தத்துமும் இல்லை. மன்னார் மக்கள் ஏன் காற்றாலைக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்று அரசு தரப்பு இன்னும் புரிந்து கொள்ளவில்லை. தீவுப் பகுதிக்குள் காற்றாலை வேண்டாம் என்பதையே மக்கள் தெரிவிக்கின்றனர். மக்கள் காற்றாலை திட்டத்திற்கு எதிரானவர்கள் இல்லை.

மேலும் கடந்த அரசுதான் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது என தற்போதைய அரசு கூறுகின்றது. ஆனால் கடந்த 22-02-2025 அன்று கேலீஸ் நிறுவனத்திற்கு 10 காற்றாலைகள் அமைக்க மின் சக்தி அமைச்சுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்தநிலையில் அதற்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்று தற்போதைய அரசு கூறி விட முடியாது.

எனவே அரசு புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். மக்களின் ஜனநாயக எழுச்சியை எந்த அரசாலும் கட்டுப்படுத்த முடியாது என்பதை கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் இலங்கை சந்தித்தது.

எனவே காற்றாலைகளை நிறுவுவதற்கு முன்னர் அரசு எங்களுடன் கலந்துரையாடல் களுக்கு வர வேண்டும். வர தவறும் பட்சத்தில் மன்னார் மக்கள் தொடர்ந்தும் இவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே கடை பிடிப்பார்கள். அதற்கான சூழலை அரசு ஏற்படுத்தியுள்ளது. மன்னார் மக்கள் இத்திட்டத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தொடர்ந்தும் மக்கள் இவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பார்கள்." – என்றார்.

குறித்த ஊடக சந்திப்பில் மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மீனவ அமைப்பின் பிரதிநிதி என்.எம். ஆலம், சமூகச் செயற்பாட்டாளர் திருமதி ரெபேக்கா ஆகியோர் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.




# அரச நிறுவனங்களுக்கு கோப் குழு அழைப்பு

கோப் எனப்படும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கீழுள்ள அனைத்து அரச நிறுவனங்களையும் அழைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.


எதிர்வரும் 02ஆம் திகதி கோப் குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது அரச நிதியை தவறாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள், அந்த நிறுவனங்களின் பொதுவான பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் போன்ற பல பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்படும் என குழுவின் தலைவர் நிஷாந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவைச் சேர்ந்த 457 நிறுவனங்கள் அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மஹிந்தவை சந்தித்தார் ஜீவன் தொண்டமான்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

விஜேராம இல்லத்தில் இருந்து வெளியேறி தற்போது தங்காலை கால்டன் இல்லத்தில் வசித்து வரும் முன்னாள் ஜனாதிபதியை மரியாதை நிமித்தம் சந்தித்து சிநேகபூர்வமாக ஜீவன் தொண்டமான் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஸ்வரன், ஜீ.எல். பீரிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பொலன்னறுவையில் குரங்குகளுக்கு நோய்

## மனிதர்களுக்கும் எச்சரிக்கை



பொலன்னறுவை மற்றும் கிரித்தலே பகுதிகளில் குரங்குகளிடையே ஒருவகை நோய் பரவி வருவதாக வனவிலங்கு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நோய் மனிதர்களுக்கும் பரவக்கூடிய அபாயம் இருப்பதால் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பொலன்னறுவை புனித நகரைச் சுற்றி அதிக எண்ணிக்கையில் கட்டுப்பாடின்றி திரியும் குரங்குகள் இருப்பதால், இந்த நோய் பரவும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

பொலன்னறுவை மற்றும் கிரித்தலேயில் உள்ள குரங்குகளின் அதிகப்படியான எண்ணிக்கைப் பிரச்சனை நீண்டகாலமாக நீடித்து வரும் மற்றும் தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாகும்.

இந்த ஆபத்து இருந்தபோதிலும், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு மிகக் குறைவாகவே உள்ளது என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தவும், நோய் என்னவென்று கண்டறியவும் வனவிலங்கு அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தற்போது நோய்வாய்ப்பட்ட குரங்குகளுக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டு, மாதிரிகள் பரிசோதனைக்காக சேகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இதய நோயினால் 80 சதவீத மரணங்கள்

உலகளாவிய ரீதியில் இதய நோயினால் ஏற்படும் உயிரிழப்புகளில், 80 சதவீதமானவை தடுக்கக்கூடியவை என இலங்கை இதயநோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சம்பத் விதானவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போது அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அத்துடன், தடுக்கக்கூடிய இதயநோய் தொடர்பான உயிரிழப்புகளைத் தடுப்பதற்கு ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமெனவும் மருத்துவர் சம்பத் விதானவசம் வலியுறுத்தியுள்ளார்.

எளிமையான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையின் மூலம் இதயநோயைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதயநோயைத் தவிர்ப்பதற்கு உடற்பயிற்சி, சிறந்த உணவு முறை, மற்றும் புகைபிடிப்பதைத் தவிர்த்தல் போன்ற சில



செயற்பாடுகளும், மருத்துவ பரிசோதனைகளும் அவசியமென இலங்கை இதயநோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சம்பத் விதானவசம் தெரிவித்துள்ளார்.

# திடீர் உடல் நலக் குறைவால் பெண் ஒருவர் உயிரிழப்பு

உறவினர் வீட்டுக்கு சென்றிருந்த நிலையில் உடல் நலக்குறைவு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கொட்டடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தியாகராசா பிரேமலதானி (வயது 46) என்பவராவார்.

மேற்படி பெண் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் உறவினர் வீட்டுக்கு சென்றிருந்த நிலையில் அங்கு உடல்நலக்குறைவு காரணமாக தனியார் வைத்தியசாலை கொண்டு சென்ற போது அவர் மயக்கம் அடைந்த பின்னர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என தெரிவிக்கப்பட்டது.



இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.







# இரத்ததான முகாமில் பங்கேற்ற இளைஞருக்கு வெள்ளிப்பதக்கம்

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற இரத்ததான முகாமில் பங்கேற்று குருதிக்கொடை வழங்கிய கரணவாயை சேர்ந்த இளைஞர் வெள்ளிப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை இரத்த தான சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 81 ஆவது இரத்த தான முகாம் யாழ் போதனா இரத்த வங்கியினரது பங்கேற்பில் வல்வெட்டித்துறை, நெடியகாடு பகுதியில் அமைந்துள்ள கணபதி மஹாலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

இதன்போது 12 பெண்கள் உள்ளிட்ட 52 பேர் குருதிக்கொடை வழங்கியுள்ளனர். இவ்வாறு குருதிக்கொடை வழங்கியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இதனடிப்படையில் கரணவாய் மேற்கு, கரவெட்டியை சேர்ந்த சிவகுமார் சிவதருண் என்ற இளைஞர் வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்க தலைவர் பா. வீரசுரேந்திரனால் வெள்ளி பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.











# விஜய் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்: மோப்ப நாயின் உதவியுடன் சோதனை

த.வெ.க. தலைவர் விஜய் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதையடுத்து அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

கரூரில் சனிக்கிழமை த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்துக்கு குடியரசுத் தலைவர், பிரதமர் மோடி உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் பிரபலங்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து சென்னை நீலாங்கரையில் உள்ள விஜய் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒரு பொலிஸ் ஆய்வாளர் தலைமையில் 15 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், மர்ம நபர் ஒருவர் மின்னஞ்சல் மூலம் விஜய் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளார். சென்னை டி.ஜி..பி அலுவலகத்துக்கு வந்த இந்த மின்னஞ்சலைத் தொடர்ந்து மோப்ப நாய் உதவியுடன் விஜய் வீட்டில் பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர்.

வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர் யார்? எங்கிருந்து இந்த மின்னஞ்சல் வந்தது எனவும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். கரூரில் நேற்று நெரிசலால் பலர் உயிரிழந்த நிலையில், நேற்று விஜய் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# விஜய், பொலிஸார் மீது குற்றம் சொல்வது பிரச்சினையை திசை திருப்பவே உதவும்

## திருமாவளவன் தெரிவிப்பு



"இது கூட்ட நெரிசலில் நடந்த ஒரு துயர சம்பவம். இதனை ஒரு விபத்தாக மட்டுமே சொல்லமுடியும். இதில் யாரும் அரசியல் ஆதாயத்தோடு செயல்படுவதோ, கருத்து சொல்வதோ பொருத்தமானது இல்லை."

– இவ்வாறு விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

கரூரில் நேற்றுமுன்தினம் த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரம் செய்தபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் உயிரிழந்தனர். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கரூர் மருத்துவமனையில் காயமடைந்தவர்களை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருமாவளவன்,

"கரூர் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெறும் 11 பேரை நேரில் சந்தித்தோம். 65 வயது மதிக்கத்தக்க சுகுணா என்பவர் கவலைக்குரிய நிலையில் உள்ளார். அவருக்கு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டு வருகிறது. மற்ற 10 பேர் ஆபத்தான கட்டத்தை தாண்டியுள்ளார். மேலும் இங்கே சிகிச்சை பெறும் பலரையும் சந்தித்தோம்.

தமிழகத்தில் எத்தனையோ தலைவர்கள், லட்சக்கணக்கான மக்களை திரட்டி கூட்டம் நடத்தியுள்ளார்கள். அப்போதெல்லாம் நிகழாத ஒன்று, முதல் முறையாக தமிழக அரசியல் வரலாற்றில் நடந்தேறியிருப்பது கவலையளிக்கிறது. இதனை கேள்விப்பட்டவுடனே கரூர் வந்து ஆறுதல் சொல்லியுள்ளார் முதல்வர் ஸ்டாலின். அவரின் விரைவான நடவடிக்கை ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

இது கூட்ட நெரிசலில் நடந்த ஒரு துயர சம்பவம். இதனை ஒரு விபத்தாக மட்டுமே சொல்லமுடியும். இதற்கு உள்நோக்கம் கற்பிக்கின்ற முயற்சி, அரசியல் ஆதாயம் கருதி செய்வதாகவே கருத வேண்டியுள்ளது. இதில் யாரும் அரசியல் ஆதாயத்தோடு செயல்படுவதோ, கருத்து சொல்வதோ பொருத்தமானது இல்லை. விஜய்தான் இதற்கு காரணம் என சொல்வதோ, பொலிஸார்தான் காரணம் என சொல்வதோ பிரச்சினைகளை திசை திருப்பவே உதவும். பாதிக்கப்பட்டோருக்கு உதவாது. இதுபோன்ற சம்பவங்களை எதிர்காலத்தில் தடுப்பதற்கும் அது உதவாது. இதில் அரசியல் விளையாட்டு தேவையில்லை என்பது என் கருத்து." எனத் தெரிவித்தார்.



# தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் பிரசாரத்திற்குத் தடை விதிக்கக்கோரி மனு

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின், பிரசாரத்திற்குத் தடை விதிக்கக்கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கரூர் கூட்ட நெரிசலில் காயமடைந்த கண்ணன் என்பவரினால், சென்னை உயர் நீதிமன்றில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில், 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சட்டசபைத் தேர்தலை இலக்கு வைத்து, வாரம்தோறும் சனிக்கிழமைகளில், பிரசாரம் செய்வதற்குத் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் திட்டமிட்டுள்ளார்.

அந்த வகையில் அவர் நேற்று கரூரில் தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்றுப் பேசியிருந்தார்.

இதன்போது, கூட்ட நெரிசல் ஏற்பட்டு 10 குழந்தைகள் உட்பட 40 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் பிரசாரத்திற்குத் தடை கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, தேர்தல் பிரசாரத்தில் போதுமான காவல்துறை பாதுகாப்பு இல்லை என்றும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முன்னதாக, கரூர் விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ அல்லது சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணைக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியின் இல்லத்திற்குச் சென்று தமிழக வெற்றிக் கழகம் சார்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மக்கள் கூட்டத்தில் கற்கள் வீசப்பட்டதுடன், திட்டமிடப்பட்ட சதி நடந்துள்ளதாகவும் தமிழக வெற்றிக் கழகம் முறையிட்டுள்ளது.

ஆனால், கரூரில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர், பிரசாரம் செய்த போது கல் வீச்சு எதுவும் நடைபெறவில்லை எனச் சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி தெரிவித்துள்ளார்.






# சீனாவில் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சருக்கு மரண தண்டனை

லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் சீனாவின் முன்னாள் விவசாய மற்றும் கிராமப்புற விவகார அமைச்சர் டாங் ரெஞ்சியனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2007 முதல் 2024 வரை பல்வேறு பதவிகளை வகித்தபோது, டாங் மொத்தம் 268 மில்லியன் யுவான் (37.6 மில்லியன் அமெரிக்க டொலர்) லஞ்சம் பெற்றார் என கூறப்படுகிறது.

இதில் பணம் மற்றும் சொத்து ஆகியவை அடங்கும்.

இருப்பினும், அவர் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டதால், மக்கள் நீதிமன்றம் அவரது மரண தண்டனையை இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தி வைத்தது.

ஊழல் எதிர்ப்பு கண்காணிப்பு அமைப்பால் இந்த விவகாரங்கள் தொடர்பாக விசாரிக்கப்பட்ட பின்னர், பதவியில் இருந்து நீக்கப்பட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு, நவம்பர் 2024 இல் டாங் சீன கொம்யூனிஸ்ட் கட்சியால் வெளியேற்றப்பட்டார்.

மேலும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லி ஷாங்ஃபு மற்றும் அவருக்கு முன்னோடியான வெய் ஃபெங்கே மீதும் இதே போன்ற விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

விவசாயம் மற்றும் கிராமப்புற விவகார அமைச்சராக நியமிக்கப்படுவதற்கு முன்பு, டாங் 2017 முதல் 2020 வரை மேற்கு கன்சு மாகாணத்தின் ஆளுநராகவும் பணியாற்றினார் என கூறப்படுகிறது.

# சீனாவில் நில அதிர்வு; 11 பேருக்கு படுகாயம்





சீனாவின் கன்சு மாகாணத்தில் ஏற்பட்ட நில அதிர்வில் சிக்கி 11 பேர் காயமடைந்தனர். ஏராளமான வீடுகள் சேதமடைந்தன.

சீனாவின் கன்சு மாகாணத்தின் லாங்சி மாவட்டத்தில் நேற்று அதிகாலை, 5.6 மெக்னிடியூட் அளவுக்கு நில அதிர்வு ஏற்பட்டது.

இதில், 17 வீடுகள் இடிந்து வீழ்ந்தன. 3,500 இராகும் மேற்பட்ட குடியிருப்பு கட்டடங்கள் சேதமடைந்தன.

லாங்சி மற்றும் ஜாங்சியன் மாவட்டங்களில் சுமார் 7,800 பேர் வீடுகளை விட்டு வெளியேறினர்.

இடிபாடுகளில் சிக்கி 11 பேர் காயமடைந்த நிலையில், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட ஆறு பேரில் ஐந்து பேருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 29.09.2025




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவதற்கு சாதகமான நாள். அது உங்களுக்கு ஆறுதல் அளிக்கும். வளர்ச்சியை அளிக்கும். இன்றைய நாளை சிறந்ததாக ஆக்க புதிய வழிகளைக் காண்பீர்கள். உணர்ச்சிவசப்படுவதை தவிர்க்கவும்.

உங்கள் அன்றாட பணிகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. இன்று அதிக பணிகள் மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

உங்களிடம் அகந்தைப் போக்கு காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் உறவு வலுப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பணப்பற்றாக் குறையை சந்திப்பீர்கள்.




இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காது. இன்றைய சவால்களை கையாள அனுசரணையான அணுகுமுறை தேவை. தன்னம்பிகை குறைந்து காணப்படும். அதனை உருவாக்கிக் கொள்ளும் வழி காண வேண்டும்.

கடினமான பணிகள் காணப்படும். அதனால் நேரம் செலவாகும். கவலையை உண்டாக்கும். பணியிடத்தில் சவாலான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் இணக்கமான உறவு காணப்படாது. ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசுவதன் மூலம் இன்றைய நாளை இனி மையாக்கலாம்.

இன்று பண வரவு ஏற்படும் அதிர்ஷ்டம் காணப்படாது. பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் திட்டங்களை செயலாற்ற நீங்கள் விரைந்து முடிவெடுப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கையை மேம்படுத்த முயற்சி செய்வீர்கள்.

பணியிடத்தில் நற்பெயர் பெறுவீர்கள். பல வாய்ப்புகள் காணப்படும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பை அதிகரிக்கச் செய்யும் நிலையில் இருப்பீர்கள்.

நீங்கள் சிறந்த மனநிலையில் காணப்படுவீர்கள். தன்னம்பிக்கையுடன் இருப்பீர்கள்.




இன்று நம்பிக்கையான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அதன் மூலம் நன்மை விளையும்.

இன்று பணியின் மூலம் பல சாதகமான பலன்கள் பெறுவீர்கள். கூடுதல் பணவரவு ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று அதிர்ஷ்டகரமான நிதிநிலை காணப்படும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். அதனை நீங்கள் கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை நீங்கள் தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் உங்கள் பணிகளை அமைதியாக மேற்கொள்ள வேண்டியது அவசியம். திட்டமிட்டு அதன்படி பணிகளை மேற்கொள்ளுங்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். சூழ்நிலையைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று உங்கள் அன்றாட செயல்களை கவனமாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்று சஞ்சலமான உணர்வுகளால் பாதிக்கப்படுவீர்கள். ஆன்மீக நடவடிக்கைகள் அமைதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவு ஏற்பட இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய பணம் காணப்படாது. கூடுதல் செலவுகள் மற்றும் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.




இன்று நம்பிக்கையான, நன்மை தரும் நாள். இன்று பல நன்மைகள் விளையும். நீங்கள் சிறப்பாக திட்டமிட்டு முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் வெளியில் சென்று மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

மூத்தவர்களின் மூலம் பணவரவு பரிசாக கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று உங்கள் இலக்குகளில் சிறந்த வெற்றி காண இயலாது. இன்று நீங்கள் புதிய விஷயங்களை கற்க விரும்புவீர்கள். ஆனால் சில காரணங்களால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் செயல்களில் பொறுமையை கையாளுங்கள்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. பணிகள் நிலுவையில் இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் அமைதியிழந்து உங்கள் துணையிடம் கோப உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு ஏற்படும்.

பண வரவிற்கு இது சாதகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளுக்காக நீங்கள் பணம் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.09.2025




உங்கள் திறமைகளை சோதிக்கும் சூழ்நிலை உருவாகும் என்பதால் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் முன்னேற்றத்தில் மந்த நிலை காணப்படும். அதிகமாக சிந்திக்காமல் தெளிவான மன நிலையுடன் இருங்கள்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும் வகையில் இருக்கும். அதிக பணிகள் காரணமாக சில பணிகள் நிலுவையில் இருக்கும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான புரிந்துணர்வு பாதிக்கப்படும். நீங்கள் அமைதியான நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. உங்களின் பிரியமான ஒருவரின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாள். எதிர்பாராதவிதமாக நன்மை கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். விருந்தினர்களின் திடீர் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமையாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் பணியில் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களின் உற்சாகமான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரும் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் கனிசமான தொகையை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சில அசௌகரியங்கள் காணப்படும். விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். உங்கள் தந்தையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். ஆன்மீக ஈடுபாடு அமைதியை அளிக்கும்.

உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும். நீங்கள் சிறந்த பலன் பெற இன்று கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிகரமாக நடந்துகொள்வீர்கள். இந்தப் போக்கு உறவின் புரிந்துணர்வை பாதிக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பணம் கிடைக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்கும். இன்று நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். எதிர்காலம் பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்கும். பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

உங்கள் தேவைகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் பாதுகாப்பாக உணர்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக இன்று ஸ்திரமான முன்னேற்றகரமான ஆரோக்கியம் காணப்படும்.



# யாழில் ஆசிரியர் ஒருவர் படுக்கையில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் சென்பற்றிக் கல்லூரி ஆசிரியரான வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் படுக்கையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கரவெட்டி மத்தியைச் சேர்ந்த செல்வம் கஜேந்திரன் (வயது 30) என்பவராவார்.

மேற்படி ஆசிரியர் குருநகர் பகுதியில் தங்கியிருந்துள்ளார். அதே பாடசாலையின் ஆசிரியை ஒருவரை காதலித்து வந்த நிலையில் இவருக்கும் இன்னும் ஒரு மாதத்தில் திருமணம் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அந்த ஆசிரியையே அவருக்கான உணவுகளை வழங்கி வந்துள்ளார். நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை உணவு வழங்கச் சென்ற போது அவர் அசைவற்றுக் காணப்பட்டதால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என தெரிவிக்கப்பட்டது.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு பிரதேச பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை யாழ்ப்பாணப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.